# புஹாரியிலிருந்து கிதாபுல் இல்ம் - (கல்வியின் ஒழுங்குகள்)




தர்பியாவின் வகுப்பு ஆசிரியர்கள்:

அஷ்-ஷைக். முஹம்மத் அஸ்ஹர் ஸீலானி
அழைப்பாளர், அல்-கோபர் த:வா (ஹிதாயா) நிலையம்

அஷ்-ஷைக். அப்பாஸ் அலி MISC
அழைப்பாளர், அல்-கோபர் இஸ்லாமிய நிலையம் (ஹிதாயா)

அஷ்-ஷைக். முஜாஹித் இப்னு ரஸீன்
அழைப்பாளர், ராக்கா இஸ்லாமிய கலாச்சார நிலையம்

அஷ்-ஷைக். மஸ்வூத் ஸலபி
அழைப்பாளர், ராக்கா இஸ்லாமிய கலாச்சார நிலையம்

அஷ்-ஷைக். அப்துல் அஜிஸ் முர்ஸி
அழைப்பாளர், இஸ்லாமிய கலாச்சார நிலையம் (ICC) தம்மாம்

அஷ்-ஷைக். அஜ்மல் அப்பாஸி
அழைப்பாளர், தஹ்ரான் இஸ்லாமிய கலாச்சார நிலையம் (சிராஜ்)


## 8 வார தர்பியாவின் பாடத்திட்டம்

Best compliments from: WWW.ISLAMKALVI.COM Media Unit, please visit & subscribe

1. மூவருக்கு இரண்டு கூலிகள் உள்ளன' என நபியவர்கள் கூறிய அந்த மூவரையும் தருக?

2. மறுமையில் நபிகளாரின் பரிந்துரைக்குத் தகுதியான மனிதர்' என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ள அந்த மனிதர் யார்?

3. அறிவு மங்கிப் போவதையும், அறிஞர்கள் மரணிப்பதையும் நான் அஞ்சுகிறேன்' எனவே ஹதீஸ்களை தொகுத்து, எழுதுங்கள்' என்று கட்டளையிட்ட கலீபாவைக் கூறுக?

4. மிக எளிதான முறையில் விசாரிக்கப்படுவார்' எனும் அல்குர்ஆன் வசனத்துக்கு நபிகளார் கூறிய விளக்கம் என்ன?

5. நபிகளாரின் புணைப் பெயரைக் கூறுக?

6. ஹரம் எல்லைக்குள் காணப்படும் செடிகளை வெட்டக் கூடாது, ஆயினும் ஒரு செடியை வெட்டுவதற்கு நபியவர்கள் சலுகை வழங்கினார்கள் அது என்ன?

7. அபூஹுரைரா (ரழி) அவர்கள் போன்று அதிகமான ஹதீஸ்களை அறிவித்த ஒரு நபித்தோழரைக் கூறுக?

8. தனக்குப் பின்னால் நபித் தோழர்கள் வழிதவறிப் போகாமல் இருப்பதற்காக நபியவர்கள் ஒரு மடலை எழுதி வழங்க நினைத்தார்கள் ஆனால் அது தடைப்பட்டுப் போனது. ஏதனால் அந்த தடை ஏற்பட்டது?

9. அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் சிறிய தாயாரின் பெயர் என்ன?

10. السمر எனும் அரபுப் பதத்தின் தமிழ் கருத்து யாது?

11. அல்லாஹ்வின் தூதரிடமிருந்து கேட்ட செய்திகளை அறிவிப்பவதற்கு அபூ ஹுரைரா (ரலி) அவர்களை தூண்டிய காரணம் யாது?

12. நபியவர்கள் ஒரு செயலைக் குறிப்பிட்டு இதைச் செய்து நிராகரிப்பளார்களாக மாறிவிட வேண்டாம் எனக் குறிப்பிட்டார்கள் அந்த செயல் என்ன?

13. உண்மையில் அல்லாஹ்வின் வழியில் போரிடுபவர் என நபியவர்கள் குறிப்பிட்டது யாரை?

14. யூதர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் எதைப் பற்றி கேட்டனர். அதற்கு அவர்கள் கூறிய பதில் என்ன?

15. நபியவர்கள் கஃபாவை எப்படி மாற்ற விரும்பினார்கள்?

16. முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்கள் மரண வேளையில் அறிவித் செய்தி என்ன?

17. ஆயிஷா (ரலி) அவர்கள் அன்ஸாரிப் பெண்களை சிறந்த பெண்களாக குறிப்பிட்டதன் காரணம் என்ன?

18. அல்லாஹ் சத்தியத்தை எடுத்துச் சொல்வதற்கு வெட்கப்படுவதில்லை எனக் கூறிய பெண் யார்?

19. மதி வெளிப்படுபவருக்கு என்ன கடமையாகும்?

20. துல்ஹுலைபாவை யாருக்குரிய எல்லையாக நபியவர்கள் குறிப்பிட்டார்கள்?

21. பொறாமைப் படுவதற்கு அனுமதிக்கப்பட்ட இரு விடயங்கள் என்ன?

22. வேதத்தை கற்றுக் கொடுக்குமாறு அல்லாஹ்விடம் எந்தத் தோழருக்காக நபியவர்கள் பிரார்த்தித்தார்கள்,

23. மஹ்மூது இப்னு ரபீவு (ரலி) தனது வாழ்நாளில் மறக்காமல் நினைவில் வைத்திருந்த நிகழ்வு?

24. அல்லாஹ்வின் தூதரை நேர்வழி மற்றும் ஞானத்துடன் அனுப்பியதற்கு அவர்கள் கூறயி உவமை யாது? சுருக்கமாக.

25. நபியவர்கள் மறுமையின் அடையாளங்களாக குறிப்பிட்ட நான்கு விடயங்கள் என்ன?

26. அல்ஹர்ஜ் الْهَرْجُ என்பதற்கு நபியவர்கள் கொடுத்த விளக்கம் யாது?

27. மண்ணறை வேதனையை யாருடைய குழப்பத்துக்கு நபியவர்கள் ஒப்பிட்டார்கள்?

28. முறைவைத்துக் கல்வியை கற்பதற்கு இமாம் புஹாரி (ரஹ்) கொண்டு வந்த ஹதீஸ் எது?

29. நபியவர்கள் ஏன் கடுமையாக கோபப்பட்டார்கள்?

30. கண்டெடுக்கப்பட்ட பொருளுக்கு நபியவர்கள் கூறிய சட்டம் யாது?

31. கல்வியின் சிறப்பை வலியுறுத்தும் இரு வசனங்கள் எவை?

32. கல்விச் சபையில் எவ்வாறு அமர வேண்டும்? இது தொடர்பான நபிமொழியை எழுதவும்.

33. எடுத்துரைப்பவரை விட எடுத்துரைக்கப்பட்டவர் நன்கு விளங்கலாம் என நபி(ஸல்) அவர்கள் ஏன் கூறினார்கள்? அதிலிருந்து அவர்கள் நம்மிடம் எதிர்பாப்பது என்ன?

34. லாயிலாஹ இல்லல்லாஹ் என்பதை நபியே அறிந்துகொள்வீராக! இவ்வசனத்தை இமாம் புகாரி அவர்கள் எதற்கு ஆதாரமாக குறிப்பிட்டார்கள்? வசனத்தை விளக்கவும்.

35. நீங்கள் ரப்பானியாக இருங்கள் என்ற வசனத்திற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அளித்த விளக்கம் என்ன?

36. கல்வி குறித்து அபூதர்(ரலி) கூறிய செய்தி என்ன?

37. நரகவாசிகளின் ஒரு உரையாடல் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அது என்ன?

38. தினமும் கல்வியை போதியுங்கள் என யாரிடம் கேட்கப்பட்டது? அதற்கு என்ன பதில் தரப்பட்டது?

39. அல்லாஹ் ஒருவருக்கு நலன்நாடினால் அவன் செய்வது என்ன?

40. சிந்தித்து கல்வி கற்றல் என்ற தலைப்பின் கீழ் ஆதாரமாக சொல்லப்பட்ட ஹதீஸ் என்ன?